## புதுகை மீனவர் உடல் மறுபிரேத பரிசோதனை

# ஐகோர்ட் கிளையில் 24ல் அறிக்கை சமர்ப்பிப்பு

**அறந்தாங்கி, நவ. 19-**

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் மீன்பிடி இறங்கு தளத்தில் இருந்து கடந்த அக்டோபர் 18ம் தேதி சுரேஷ் என்பவருக்குசொந்தமானவிசைப்படகில் ராஜ்கிரண்(30), சுகந்தன்(23), சேவியர்(32) ஆகிய 3 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். நடுக்கடலில்மீன்பிடித்துகொண்டிருந்தபோது, அங்கு வந்த இலங்கை கடற்படையினரின்ரோந்துகப்பல் மோதிய வேகத்தில் விசைப்படகு கடலில் கவிழ்ந்தது. இதில் ராஜ்கிரண் கடலில் மூழ்கி உயிரிழந்தார். சுகந்தன் மற்றும் சேவியரை இலங்கைகடற்படையினர்சிறைபிடித்து இலங்கை கொண்டு சென்றனர். ராஜ்கிரண் உடலைஇலங்கை கடற்படையினர் மீட்டு இலங்கை கொண்டு சென்றனர். பின்னர் அங்குபிரேதபரிசோதனைசெய்து இந்திய அரசிடம்ஒப்படைத்தனர்.

## அதிகாரிகள் தகவல்

இந்திய கடற்படை அதிகாரிகள், கடந்த மாதம் 23ம் தேதி ராஜ்கிரண் உடலைதமிழக மீனவர்கள் மற்றும்மீன்வளத்துறை அதிகாரிகளிடம் நடுக்கடலில் ஒப்படைத்தனர். இதைத்தொடர்ந்து கோட்டைப்பட்டினம் அருகே உள்ள பொன்னன்வயல் மயானத்தில் ராஜ்கிரண் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இந்நிலையில் கடந்த 12ம்தேதி தேதிராஜ்கிரண் மனைவி பிருந்தா, மதுரை ஐகோர்ட் கிளையில் மனு தாக்கல்செய்தார். அந்தமனுவில், இலங்கைகடற்படையால்கணவர் சுட்டு கொல்லப்பட்டிருக்கலாம். இதுகுறித்து தமிழக போலீசார் வழக்கு பதிவு செய்யவும், ராஜ்கிரண் உடலை தடயவியல் நிபுணர்களை கொண்டு மறுபிரேத பரிசோதனை செய்யவும் உத்தரவிடவேண்டும்என குறிப்பிட்டிருந்தார்.



ராஜ்கிரண்

இந்த வழக்கை கடந்த 16ம்தேதி விசாரித்த நீதிபதி சுவாமிநாதன், கோட்டைப்பட்டினம் மீனவர் ராஜ்கிரண் உடலைமறுபிரேதபரிசோதனைசெய்யவும், இதன் அறிக்கையை வரும் 24ம் தேதி சமர்ப்பிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

அதன்படி நேற்று மணமேல்குடி தாசில்தார் ராஜா, டிஎஸ்பி மனோகரன் மற்றும் அதிகாரிகள், மீனவர்கள் முன்னிலையில் கோட்டைப்பட்டினம் மயானத்தில் அடக்கம்செய்யப்பட்டிருந்த ராஜ்கிரண் உடல் பொக்லைன் மூலம் தோண்டி எடுத்து மறுபிரேதபரிசோதனைக்காகபுதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

நேற்று மதியம் 2.45 மணியளவில் மருத்துவர்கள் தமிழ்மணி, சரவணன், ஓய்வுபெற்ற தடயவியல் அதிகாரி சேவியர் செல்வசுரேஷ் ஆகியோர் அடங்கிய குழுவினர் ராஜ்கிரண் உடலை மறுபிரேத பரிசோதனை செய்தனர். இந்த பரிசோதனை முழுமையாக வீடியோவில் பதிவு செய்யப்பட்டது. பின்னர் ராஜ்கிரண் உடல், அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு மீண்டும் கோட்டைப்பட்டினம் பொன்னன்வயல் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், ராஜ்கிரண் உடல் மறுபிரேதபரிசோதனைசெய்யப்பட்ட அறிக்கைவரும் 24ம் தேதி மதுரை ஐகோர்ட் கிளையில் சமர்ப்பிக்கப்படும் என்றனர்.

தமிழ் முரசு
Fri, 19 November 2021
tm.dinakaran.com/c/64440254